

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் ஓய்வு பெற்ற ஊழியர் முன்னேற்ற நலசங்கம் சார்பில் 650 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா சங்கத்தின் மண்டல பொதுச் செயலாளர் ஆர்.வி.மாடசாமி தலைமையில் தொ.மு.ச.மண்டல பொதுச் செயலாளர் ராஜசெல்வம் முன்னிலையில் நிதி சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஓய்வு பெற்ற ஊழியர் மனைவிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், தொ.மு.ச. பேரவை பொதுச் செயலாளர் மு.சண்முகம், தொ.மு.ச.பேரவைத் தலைவர் நடராஜன், தொ.மு.ச.பேரவை பொருளாளர் சி.வள்ளுவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில்

# பாளையங்கோட்டை தொகுதிக்குட்பட்ட பாக முகவர்கள் கூட்டம்!

## அமைச்சர் கே.என்.நேரு – கனிமொழி கருணாநிதி எம்.பி. சிறப்புரை!

நெல்லை, ஜூலை 1-

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் திருநெல்வேலி, பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட (BLA 2) பாக நிலை முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் பாளையங்கோட்டை கே.டி.சி நகர் மாதா மாளிகையில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கழக முதன்மைச் செயலாளர்,நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு,கழக துணை பொதுச் செயலாளர் கழக நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி ஆகியோர் பங்கேற்று சிறப்பித்தனர்.

பின்னர் அமைச்சர் கே.என்.நேரு பேசியதாவது:-

"ஓரணியில் தமிழ்நாடு "என்ற முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் உத்தரவின்படி புதிய உறுப்பினர்கள் சேர்க்கை குறித்தும்,

பாக நிலை முகவர்கள் எவ்வாறு செயல்பட வேண்டும் என்றும் 2026 தேர்தல் முன்னிட்டு கழகத்தினர் தீவிரவாக செயல்படுவது குறித்தும் பல்வேறு ஆலோசனைகளை வழங்கி உரையாற்றினார்.

அதன் பின்னர் கழக துணை பொதுச் செயலாளர்,கழக நாடாளுமன்ற குழு தலைவர், மண்டல பொறுப்பாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி.அவர்கள் பல்வேறு ஆலோசனைகளை வழங்கி எடுத்துரைத்து பேசியதாவது.

அன்பும் உரிமையும் அதிகம் இருக்கும் இடங்களில் தான் அதிகளவு சண்டை நடக்கும்.நம்மில் நடக்கும் சண்டைகள் எல்லாம் மறந்து அனைத்து மனமாச்சரியங்களையும் மறந்து தேர்தல் பணியை நாம் செய்ய வேண்டும்.தி.மு.க. வின் உடன்பிறப்புகளாக, உறவினர்களாக ஒன்றிணைந்து இந்த தேர்தலை நாம் சந்திக்க வேண்டும்.அனைத்து தொகுதிகளையும் வென்றெடுத்து காட்டுவோம் என கழகத் தலைவர் அண்ணன் தளபதி அவர்களிடம் உறுதி கொடுத்துள்ளேன்.அதனை நாம் சாத்தியமாக்க வேண்டும் எத்தனையோ தேர்தல்களை நாம் சந்தித்திருக்கிறோம்.நமது உரிமைகளை மீட்டெடுப்பதற்கான தேர்தல் இது, என்பதை புரிந்து அனைவரும் ஒன்றிணைந்து களப்பணியாற்ற வேண்டும்.

அண்ணன் தளபதி அவர்கள் "ஓரணியில் தமிழ்நாடு" என்ற முழக்கத்தில் உறுப்பினர் சேர்க்கை முகாம் குறித்து காணொளியில் விளக்கினார்கள்.அதன்படி நமது பாக முகவர்கள் கிராமங்களாக இருந்தாலும் ஒவ்வொரு வீடுகளுக்கும் சென்று 10 நிமிடமாவது அவர்களுடன் உரையாட வேண்டும்.

கழக அரசின் திட்டங்களான புதுமைப் பெண், தமிழ்ப் புதல்வன் திட்டங்கள், மகளிர் உரிமைத் தொகை விடியல் பயணம்,காலை உணவு திட்டம் போன்றவைகள் மூலம் பயன்பெறாத குடும்பங்களே இருக்க முடியாது.எனவே இது குறித்து அவர்களிடம் எடுத்துரைத்து உறுப்பினராக சேர்க்க வேண்டும். நமது மொழியை ஒழித்து தமிழகத்தின் உரிமைகளை பறித்து விட வேண்டும்,வரலாற்றில் தமிழை மறைத்து விட வேண்டும் என நினைக்கும் ஆட்சியாக ஒன்றிய பா.ஜ.க. இருந்து வருகிறது.அதனை நாம் யாரும் மறந்து விடக்கூடாது. பா.ஜ.க. எப்படி இந்த தேர்தலை அணுகு கிறது என்பதை நாம் சிந்தித்துப் பார்த்து பணிகளை மேற்கொள்ள வேண்டும்.எப்போதும் நாங்கள் இணைய மாட்டோம் என கூறிவிட்டு பிரிந்து கிடந்தவர்களை எல்லாம் ஒருங்கிணைத்து இந்த தேர்தலை பா.ஜ.க சந்திக்கிறது.தமிழகத்தில் இனி ஒட்டும் இல்லை, உறவும் இல்லை என சொன்னவர்களை எல்லாம் ஒரே அணியில் திரட்டி பா.ஜ.க தேர்தலை சந்திக்கிறது. காரணம் தி.மு.க.வை பார்த்து எதிர்க்கட்சி கூட்டணி பயந்து விட்டது. நமது கட்சியின் கொள்கையின் தந்தையாக இருக்கக்கூடிய பேரறிஞர் அண்ணா, பெரியார் அவர்களையும் ஒரு மேடையில் அசிங்கப்படுத்தி கொச்சைப்படுத்தி பேசி காணொளி காட்சியை வெளியிட்டுள்ளது.ஆனால் அதை எதிர்த்து கேட்க கூட திராணியும் தகுதியும் இல்லாதவர்கள் கட்சி நடத்தி வருகின்றனர்.மீண்டும் அண்ணன் தளபதி தலைமையில் கழக ஆட்சி அமைய முழு ஈடுபாட்டுடன் இணைந்து பணியாற்ற வேண்டும். உங்களுடன் இணைந்து நாங்களும் பணியாற்ற தயாராக இருக்கிறோம்.

இவ்வாறு கழக துணைப் பொதுச் செயலாளர்,கழக நாடாளுமன்ற குழு தலைவர்,கனிமொழி கருணாநிதி எம்.பி.அவர்கள் பேசினார்.

நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா. ஆவுடையப்பன், கழக மாநில சிறுபான்மை யினர் நல உரிமைப் பிரிவு தலைவர் முன்னாள் அமைச்சர் டி.பி.எம். மைதீன்கான், மாநகர பொறுப்பாளர்கள் சு.சுப்பிரமணியன் தினேஷ், தொகுதி பார்வையாளர்கள் வசந்தம் ஜெயகுமார் (பாளை) முத்துச்செல்வி (நெல்லை)மேயர் கோ.ராமகிருஷ்ணன்,துணை மேயர் ராஜூ, முன்னாள் எம்.பி. ஞானதிரவியம், தீர்மானக் குழு உறுப்பினர் சுப.சீத்தாராமன், மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் மாலை ராஜா, மாநில மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர் விஜிலா சத்யானந்த், மாநில நெசவாளர் அணி செயலாளர் பெருமாள், மாநில சட்டத்துறை துணைச் செயலாளர் ராஜா முகமது, மாநில பொறியாளர் அணி துணை செயலாளர் ராஜவர்மன், மத்திய மாவட்ட அவைத்தலைவர் முருகன், துணைச் செயலாளர்கள் சுரேஷ்,தர்மன், கிரிஜா குமார்,தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஏ.எல்.எஸ்.லெட்சுமணன், பேச்சிப்பாண்டியன், பொதுக்குழு உறுப்பினர்கள் சரவணன், நடராஜன், ராஜேஸ்வரி கண்ணன், மாநகர துணைச் செயலாளர்கள் அப்துல் கையூம், பாலமுருகன் என்ற பிரபு, சுதா மூர்த்தி, மாநகர பொருளாளர் பூக்கடை அண்ணாதுரை, பகுதி செயலாளர்கள் பூ.சுப்பிரமணியன், டாக்டர் சங்கர், அண்டன் செல்லத்துரை, சையது முகைதீன், துபாய் சாகுல் ஹமீது, நமச்சிவாயம் என்ற கோபி, வழக்கறிஞர் சங்கர், மானூர் ஒன்றிய செயலாளர்கள் மேற்கு அன்பழகன்,கிழக்கு அருள்மணி, தெற்கு மாரியப்பன், பேரூர் கழக செயலாளர்கள் செல்வபாபு, பேச்சிகுட்டி, அணி அமைப்பாளர்கள் காமினி தேவன், வில்சன் மணித்துரை, கருப்பசாமி கோட்டையப்பன், செல்வ சூடாமணி, அனிதா, சௌந்தரம் முத்துராஜ், தகவல் தொழில் நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் காசிமணி, பொறியாளர் அணி சாய்பாபா, எல்.ஐ.சி. பேச்சிமுத்து, மண்டல தலைவர்கள் பிரான்சிஸ், மகேஸ்வரி, கதீஜா இக்லாம் பாசிலா, ரேவதி, மாமன்ற உறுப்பினர்கள் சகாய ஜூலியட் மேரி உலகநாதன், அலி சேக் மன்சூர்,

கழகப் பேச்சாளர்கள் நெல்லை ரவி,முத்தையா, ராவணன், மில் ஜே.குமார் உள்பட மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, பகுதி கழக நிர்வாகிகள், வட்ட, கிளை கழகச் செயலாளர்கள், பாக முகவர்கள் (BLA 2) சார்பு அணி அமைப்பாளர்கள்,

உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக தொண்டர்கள் ஆகியோர் திரளாக கலந்து கொண்டனர்.

### 2024 – 2025 அரவைப் பருவத்திற்கு – சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு வழங்கிய

# விவசாயிகளுக்கு சிறப்பு ஊக்கத் தொகை வழங்கிட ரூ.297 கோடி!

## அரசாணை வெளியீடு! அமைச்சர் இரா.இராஜேந்திரன் தகவல்!

**சென்னை, ஜூலை 1-**

**2024-2025 அரவைப் பருவத்திற்கு சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு பதிவு செய்து வழங்கிய விவசாயிகளுக்கு சிறப்பு ஊக்கத் தொகை வழங்குவதற்காக ரூ 297/- கோடி வழங்கி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது என சுற்றுலா மற்றும் சர்க்கரைத் துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்துள்ளார்**

**அவரது அறிக்கை வருமாறு:**



கரும்பு விவசாயிகளின் நலன் மற்றும் சர்க்கரை ஆலைகளின் வளர்ச்சிக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டில் 16 கூட்டுறவு, 2 பொதுத்துறை, 22 தனியார் என மொத்தம் 40 சர்க்கரை ஆலைகள் உள்ளன.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, கடந்த மாதத்தில் எட்டு கூட்டுறவு சர்க்கரை ஆலைகளைச் சார்ந்த 5,920 கரும்பு விவசாயிகளுக்கு ரூ.97.77 கோடி கரும்பு கிரயத் தொகை வழங்கப்பட்டது. மேலும், கரும்பு விவசாயிகளின் மீது அக்கறை கொண்ட இவ்வரசு கரும்பு சாகுபடி பரப்பை அதிகரிப்பதற்காகவும், சர்க்கரை ஆலைகளின் செயல்திறனை மேம்படுத்துவதற்கும் பல்வேறு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

**கரும்புக்கு சிறப்பு ஊக்கத் தொகையாக டன் ஒன்றுக்கு ரூ.349/-**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 2021-ஆம் ஆண்டு முதல், தமிழக அரசு கரும்பு விவசாயிகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் சிறப்பு ஊக்கத் தொகை வழங்கி வருகிறது. இதன் தொடர்ச்சியாக, முன் எப்போதும் இல்லாத அளவிற்கு, 2025-26 ஆம் ஆண்டு வேளாண்மை நிதி நிலை அறிக்கையில், 2024-25 அரவைப்பருவத்தில் 12 கூட்டுறவு, 2 பொதுத்துறை மற்றும் 16 தனியார் துறை சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு வழங்கிய விவசாயிகளுக்கு டன்னுக்கு ரூ.349/- சிறப்பு ஊக்கத் தொகையாக வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

தற்போது, கரும்பிற்கு சிறப்பு ஊக்கத்தொகையாக டன் ஒன்றுக்கு ரூ.349/- வழங்கிடும் வகையில், ரூ.297/-கோடி நிதியினை ஒதுக்கி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

அரசு வெளியிட்டுள்ள இந்த ஆணையின்படி, 2024-25 அரவைப் பருவத்தில், சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு வழங்கிய சுமார் ஒரு லட்சத்து முப்பதாயிரம் கரும்பு விவசாயிகள் பயனடைவார்கள். இந்த சிறப்பு ஊக்கத் தொகை தகுதி வாய்ந்த கரும்பு விவசாயிகளின் வங்கி கணக்கிற்கு நேரடியாக விரைவில் வழங்கிட உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. கடந்த நான்கு ஆண்டுகளில் சிறப்பு ஊக்கத்தொகையாக 4,79,030 கரும்பு விவசாயிகளுக்கு மொத்தம் ரூ.848.16/-கோடி வழங்கப்பட்டுள்ளது.

2024-25 அரவைப்பருவத்திற்கு கரும்பு வழங்கிய சுமார் 1,30,000 விவசாயிகளுடன் சேர்த்து, கடந்த நான்கு ஆண்டுகளில் 6,09,030 கரும்பு விவசாயிகள் ரூ.1,145.12 கோடி சிறப்பு ஊக்கத்தொகை பெற்று பயனடைய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு பொறுப்பேற்றது முதல், கடந்த நான்கு ஆண்டுகளில் மட்டும், வரலாற்றில் முதன்முறையாக சிறப்பு ஊக்கத்தொகை மற்றும் கரும்பு கிரய நிலுவைத் தொகை வழங்க சுமார் 1,945.25/- கோடி வழங்கப்பட்டுள்ளது.

கரும்பு விவசாயிகள் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்தி, 2025-26 அரவைப் பருவத்திற்கு அதிக பரப்பளவில் கரும்பு சாகுபடி மேற்கொண்டு, சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு வழங்கி பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு, கரும்பு விவசாயிகளின் நலனுக்காகவும், சர்க்கரை ஆலைகளின் வளர்ச்சிக்காகவும் சிறப்பு ஊக்கத் தொகை மற்றும் கரும்பு கிரயத் தொகையை உரிய காலத்தில் வழங்க ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை எடுத்துவரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு கரும்பு விவசாயிகளின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.



# தி.மு.க. இளைஞர் அணி

## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

### மதுரை வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மு.இளங்கோ அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும், கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

மதுரை வடக்கு மாவட்டத்தில் மேலூர் நகரத்தில் தெருமுனைக் கூட்டம் முடிவடைந்துள்ள நிலையில், மற்ற ஒன்றிய–பகுதி–பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம் / பகுதி / பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 02.07.2025 | அலங்காநல்லூர் கிழக்கு ஒன்றியம் | ஆதனூர் | தருமபுரி அதியமான்<br>ச.சௌமியா |
| 2 | 03.07.2025 | கொட்டாம்பட்டி கிழக்கு ஒன்றியம் | சொக்கலிங்கபுரம் | சிவமுத்து வளவன்<br>அ.செஸ்லின் தீப்தி சிந்தியா |
| 3 | | பாலமேடு பேரூர் | பாலமேடு சந்திப்பு | தருமபுரி அதியமான்<br>மா.ஜோஸ்பின் இலக்கியராணி |
| 4 | 04.07.2025 | எ.வள்ளாலபட்டி பேரூர் | வெள்ளிமலையாண்டி கோயில் | சிவமுத்து வளவன்<br>ப.பிரசாந்த் |
| 5 | | மேலூர் கிழக்கு ஒன்றியம் | வண்ணமரப்பட்டி மந்தை | உசிலை குபேந்திரன்<br>அ.செஸ்லின் தீப்தி சிந்தியா |
| 6 | | வாடிப்பட்டி பேரூர் | தாதம்பட்டி மந்தை | செந்தமிழ் அரசு<br>மா.ஜோஸ்பின் இலக்கியராணி |
| 7 | | அலங்காநல்லூர் பேரூர் | வலசை | மதுரை கலைக்கமல்<br>ப.பிரசாந்த் |
| 8 | 05.07.2025 | வாடிப்பட்டி வடக்கு ஒன்றியம் | இரும்பாடி | செந்தமிழ் அரசு<br>ப.பிரசாந்த் |
| 9 | | அலங்காநல்லூர் மேற்கு ஒன்றியம் | தனிச்சியம் | மதுரை கலைக்கமல்<br>ச.சௌமியா |
| 10 | | கொட்டாம்பட்டி மேற்கு ஒன்றியம் | பொட்டப்பட்டி | ச.சாதுராஜன்<br>அ.செஸ்லின் தீப்தி சிந்தியா |
| 11 | | கொட்டாம்பட்டி தெற்கு ஒன்றியம் | கக்கன் மண்டபம் அருகில், தும்பைப்பட்டி. | மா.ஜோஸ்பின் இலக்கியராணி |
| 12 | 06.07.2025 | சோழவந்தான் பேரூர் | தெற்குத் தெரு | ச.சௌமியா<br>மா.ஜோஸ்பின் இலக்கியராணி |
| 13 | | மதுரை மேற்கு ஒன்றியம் | வயலூர் | அ.செஸ்லின் தீப்தி சிந்தியா<br>ப.பிரசாந்த் |
| 14 | | மேலூர் தெற்கு ஒன்றியம் | வெள்ளலூர் | போடி காமராஜ்<br>ப.பிரசாந்த் |
| 15 | | பழங்காநத்தம் பகுதி | பழங்காநத்தம் சந்திப்பு | சிவமுத்து வளவன்<br>தெ.வர்ஷினி |
| 16 | 07.07.2025 | மேலூர் வடக்கு ஒன்றியம் | அழகர்கோயில் கோயில் வாசல் | குமரி பிரபாகரன்<br>மா.ஜோஸ்பின் இலக்கியராணி |
| 17 | 12.07.2025 | வாடிப்பட்டி தெற்கு ஒன்றியம் | குருவித்துறை | ச.சாதுராஜன்<br>ப.பிரசாந்த் |
| 18 | | கண்ணனேந்தல் பகுதி | மீனாட்சியம்மன் நகர் | கம்பம் பாண்டிதுரை<br>மா.ஜோஸ்பின் இலக்கியராணி |
| 19 | | மதுரை கிழக்கு தெற்கு ஒன்றியம் | ஆண்டார் கொட்டாரம் | ச.சௌமியா |
| 20 | 13.07.2025 | மதுரை கிழக்கு ஒன்றியம் | ஒத்தக்கடை பேருந்து நிலையம் | ப.பிரசாந்த் |
| 21 | 19.07.2025 | மதுரை மேற்கு வடக்கு ஒன்றியம் | சத்திரப்பட்டி சந்திப்பு | போடி காமராஜ்<br>மா.ஜோஸ்பின் இலக்கியராணி |
| 22 | | சோலையழகுபுரம் பகுதி | சோலையழகுபுரம் சந்திப்பு | ச.சாதுராஜன்<br>ப.பிரசாந்த் |
| 23 | 20.07.2025 | மதுரை கிழக்கு வடக்கு ஒன்றியம் | கடச்சனேந்தல் சந்திப்பு | போடி காமராஜ்<br>ச.சௌமியா |
| 24 | | ஜீவா நகர் பகுதி | ஜீவா நகர் சந்திப்பு | மதுரை கலைக்கமல்<br>அ.செஸ்லின் தீப்தி சிந்தியா |
| 25 | | பரவை பேரூர் | காந்தி சிலை அருகில் | ச.சாதுராஜன்<br>தெ.வர்ஷினி |
| 26 | | திருப்பரங்குன்றம் வடக்கு ஒன்றியம் | காந்தி சிலை அருகில் | ச.சாதுராஜன்<br>தெ.வர்ஷினி |
| 27 | 26.07.2025 | திருப்பாலைப் பகுதி | உச்சப்பரம்புமேடு | ப.பிரசாந்த் |
| 28 | | ஆனையூர் பகுதி | பார்க் டவுன் | அ.செஸ்லின் தீப்தி சிந்தியா |
| 29 | | சம்மட்டிபுரம் பகுதி | சம்மட்டிபுரம் சந்திப்பு | மா.ஜோஸ்பின் இலக்கியராணி<br>ச.சௌமியா |
| 30 | 27.07.2025 | வண்டியூர் பகுதி | சௌராஷ்ட்ரா குடியிருப்பு | ச.சௌமியா |
| 31 | | பெத்தானியாபுரம் பகுதி | பெத்தானியாபுரம் சந்திப்பு | மா.ஜோஸ்பின் இலக்கியராணி |

**மதுரை**

நாள் : 30.06.2025

கலைஞர் 100 1924 - 2023

